**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருப்பதி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**21.12.2023 OS No. 38/2022 வா.சா.1** திருப்பதி **ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் முருகேசன் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கீழடியிலிருந்து தார்சாலை கிழமேலாக எங்கு செல்கிறது என்றால் கல்லம்பு, பனையூர் செல்லும் தார்சலையாகும். மேற்படி தார்சாலையிலிருந்து தெற்கு புறமாக சிமிண்ட்டால் ஆன சாலை செல்கிறது என்றால் சரிதான். சிமிண்ட் சாலை என் வீட்டிற்கு முன்பு எந்தப்பக்கம் திரும்புகிறது என்றால் கிழக்குப்பக்கமாக திரும்புகிறது.

2. மேற்படி கிழக்கு பக்கமாக திரும்பும் சாலையில் வடக்கு புறமாக சென்றால் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லலாம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், பாதைக்கும் கிழக்கே யார் வீடு உள்ளது என்றால் முருகேசன் வீடு உள்ளது. பிரதிவாதி வீட்டிற்கு செல்லும் மின் இணைப்பு சிமிண்ட் சாலையிலிருந்து என் வீட்டின் வழியாக எந்தப்புறம் செல்கிறது என்றால் என்வீட்டின் பின்புறம் உள்ள சந்து வழியாக செல்கிறது. என் வீட்டின் பிரதான வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்குப்பக்கமாகும். எனக்கு வடக்குபக்கம் வாசல் உள்ளது என்றால் சரிதான். மேற்குப்பக்கம் வாசலை நான் பயன்படுத்துகிறேனா என்றால் பயன்படுத்துகிறேன். மேற்குப்பக்கமாக உள்ள பாதை வழியாகதான் பிரதிவாதி வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் அவர்கள் தனி சொத்து, எனது சொத்து தனியாகும்.

3. என் வீட்டிற்கு மேற்கு உள்ளே பாதைக்கும் மேற்கே யார் வீடு உள்ளது என்றால் முத்து வீடு உள்ளது. முத்து வீட்டிற்கும் தெற்கே காலியிடம் உள்ளது என்றால் சரிதான். காலியிடத்திற்கும் தெற்கே உள்ள வீடுதான் பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான். பிரதிவாதி தொகுப்பு வீடு என்றால் காரவீடு கட்டியுள்ளார்கள். பிரதிவாதி வீட்டின் தென்புறம் காலியாக பள்ளமாக உள்ளது என்றால் பெரியகிழவன் இடம் உள்ளது. எந்த இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பழைய புல எண்.7/2க்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து நான்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் இந்த வழக்கில் என்ன வருவாய் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2-

ல் தாவா சொத்து என்னவென்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை சொல்லமுடியுமா என்றால் எனக்கு அவ்வளவாக படிக்க தெரியாது. வழக்கு பிராதில் உள்ள விபரத்தையும், நான்தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் உள்ள விபரத்தையும் நான் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளின் சொத்திற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும், நான் எந்த சொத்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரமும் தெரியமாலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் என் வழக்கு நிலைநிற்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து பார்வையிடுவது அவசியம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.